திருவிழாக் காலத்தில் போடப்படும் கடைகளை நம்பி, மக்கள் ஏமாறக்கூடாது!

# கிறிஸ்தவ நிறுவனங்களுக்கு வரும் நிதியை அபகரிக்க பா.ஜ.க. முயற்சி - மிகுந்த எச்சரிக்கையாக வாக்களிக்க வேண்டிய தேர்தல் இது!

## திருச்சி கிழக்கு வேட்பாளர் இனிகோ இருதயராஜுக்கு வாக்குகள் சேகரித்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பதிலடி!

திருச்சி,ஏப்.14 -

**திருச்சிராப்பள்ளியில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின், திருச்சி கிழக்கு சட்டமன்றத் தொகுதியின் திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் முனைவர் இனிகோ இருதயராஜ்க்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்குகள் சேகரித்து, பிரச்சாரம் மேற்கொண்டார்.**

**அப்போது அவர், ``வெளிநாட்டில் இருந்து கிறிஸ்தவத் தொண்டு நிறுவனங்களுக்கு வருகின்ற நிதியை முறைப்படுத்துகிறோம் என்கின்ற பெயரில், ஒரு மிகப் பெரிய சூழ்ச்சியை, பா.ஜ.க. அரசு நடத்தத் திட்டமிட்டு இருக்கிறது. `விதிமுறைகளை மீறிவிட்டார்கள்' என்று பொய் காரணத்தைச் சொல்லி, கிறிஸ்தவ நிறுவனங்களின் அனைத்து சொத்துகளையும் அபகரிக்கின்ற முயற்சியை செய்திட, ஒன்றிய பா.ஜ.க. அரசு திட்டமிட்டுள்ளது. மிகுந்த எச்சரிக்கையாக வாக்களிக்க வேண்டிய தேர்தல் இது" என்று குறிப்பிட்டார்.**

**கழக இளைஞர் அணிச் செயலாளரும் துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

முதலில் இந்தச் சிறப்பான, எழுச்சியான, அன்பான, உற்சாகமான வரவேற்பு அளித்திருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

வருகிற சட்டமன்றத் தேர்தலில், இந்த திருச்சி கிழக்குத் தொகுதியில் நம் வேட்பாளர், உங்களின் சட்டமன்ற உறுப்பினர், தலைவரின் அன்பைப் பெற்ற வேட்பாளர், என் அருமை அண்ணன் இனிகோ இருதயராஜ் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் வாக்களித்து மிகப்பெரிய வெற்றியைத் தேடித்தர வேண்டும் என்று உங்களையெல்லாம் கேட்டுக் கொள்ள நான் வந்திருக்கிறேன். ஆனால், இங்கு வந்து உங்களின் உற்சாகம், உங்களின் மகிழ்ச்சி, உங்களின் ஆரவாரத்தையெல்லாம் பார்க்கும் போதுதான் தெரிகிறது, நான் உங்களிடம் கேட்க வேண்டிய அவசியமே இல்லை என்று. நீங்கள் ஏற்கனவே இனிகோ இருதயராஜ் அண்ணனின் வெற்றியை உறுதி செய்து வைத்திருக்கிறீர்கள்.

உங்களிடம் மீண்டும் அண்ணன் இனிகோ இருதயராஜ் அவர்களுக்கு, ஒரு வாய்ப்புக் கொடுங்கள் என்று கேட்க வந்திருக்கிறேன். எந்தத் தைரியத்தில் கேட்க வந்திருக்கிறேன்? கடந்த ஐந்து ஆண்டுகளாக இந்தத் தொகுதிக்கு என்னென்ன சாதனைகளை அவர் செய்திருக்கிறார், என்னென்ன திட்டங்களை எல்லாம் செய்துகொடுத்திருக்கிறார், அவற்றையெல்லாம் சொல்லி அந்த உரிமையோடு உங்களைச் சந்தித்து உதயசூரியன் சின்னத்துக்கு வாக்களியுங்கள் என்று கேட்க வந்திருக்கிறேன்.

### திருச்சி கிழக்கில் திட்டங்கள்

சில திட்டங்களை மட்டும் உங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்:

300கோடிரூபாய்செலவில்மிகப்பிரம்மாண்டமான அளவில் இங்கு காமராஜர் படிப்பகம் அமைக்கப்பட்டு வருகிறது. அதைக் கொண்டு வந்தது உங்களின் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் இனிகோ இருதயராஜ் அவர்கள்.

6 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள சந்தையில் கான்கிரீட் சாலைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

குடிநீர் வசதி போன்ற அடிப்படை வசதிகளை உறுதிசெய்ய இன்று முதலமைச்சரிடம் 50 கோடி ரூபாய் பெற்று வந்திருக்கிறார் உங்களின் சட்டமன்ற உறுப்பினர்.

தற்போது, காந்தி சந்தைப் பகுதியில் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

13 வருடமாக நடிகர் திலகம் சிவாஜி கணேசனின் சிலையை, சாக்குப்பையில் மூடி வைத்திருந்தார்கள்; பல்வேறு முயற்சிகள் எடுத்து இன்று அதைத் திறந்து வைத்தவர் நம் வேட்பாளர் அண்ணன் இனிகோ இருதயராஜ் அவர்கள்.

பட்டாவுக்கு விண்ணப்பித்து நீண்ட காலமாகக் காத்திருந்த கிட்டத்தட்ட 3,000-க்கும் மேற்பட்டோருக்கு வீட்டு மனைப் பட்டாக்களை வழங்கியவர் அண்ணன் இனிகோ இருதயராஜ் அவர்கள்.

8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 50 கிலோமீட்டருக்குப் புதிய குடிநீர்க் குழாய்கள் பதித்துக் கொடுத்ததுடன், போக்குவரத்து நெரிசலைக் குறைக்க மேலப்புலிவார் ரோடு பகுதியில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல அடுக்கு வாகன நிறுத்துமிட வசதி இன்று அமைக்கப் பட்டிருக்கிறது என்றால், அந்தத் திட்டத்தை இங்கு கொண்டு வந்தவர் உங்களின் சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் இனிகோ இருதயராஜ் அவர்கள்.

மின்சாரக் கம்பிகளால் சுவாமி தேரோட்டத்தில் விபத்துகள் ஏற்படாமல் இருக்கத் தேரோடும் வீதிகளில் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிலத்தடி மின்சார வடம் அமைத்துக் கொடுத்தவர் உங்களின் சட்டமன்ற உறுப்பினர்.

அதுமட்டுமல்லாமல், பல்வேறு கோரிக்கைகள் வைத்திருக்கிறீர்கள். முக்கியமான கோரிக்கையை மட்டும் சொல்கிறேன்.

காந்தி சந்தையை இங்கிருந்து மாற்றக்கூடாது என்று சொல்லியிருக்கிறீர்கள். காந்தி சந்தை மாற்றப்படாது என்று நம் முதலமைச்சர் அவர்களைச் சட்டமன்றத்தில் சொல்ல வைத்தவர் உங்களின் சட்டமன்ற உறுப்பினர்.

காந்தி சந்தைப் பகுதியில் உயர்மட்ட மேம்பாலம் அமைக்கப்படும்.

இங்கு இருக்கக்கூடிய கிளைச் சிறை வேறு இடத்துக்கு மாற்றப்பட்டுச் சந்தைப் பகுதி விரிவாக்கம் செய்யப்படும்.

இந்த இடத்தில் குறிப்பாக, காய்கறி வியாபாரிகள் பயன்பெறுகின்ற வகையில் குளிரூட்டப்பட்ட வசதிகள் செய்து தரப்படும்.

வேலை வாய்ப்பு உருவாக்குகின்ற வகையில், திருச்சி கிழக்குச் சாலையில் ஒரு தொழிற்சாலை கொண்டு வரப்படும்.

மலைக்கோட்டைப் பாறையில் ரோப் கார் அமைக்க வேண்டும் என்பது உங்களின் நீண்ட காலக் கோரிக்கை. ஆனால், அதற்குச் சாத்தியமில்லை என்று ஆய்வு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அந்த ஆய்வு அறிக்கையின்படி உச்சிப்பிள்ளையார் கோவிலுக்குச் செல்ல நிச்சயமாக நம் திராவிட மாடல் 2.0 ஆட்சியில் மின்தூக்கி வசதி செய்து தரப்படும் என்ற வாக்குறுதியை நான் கொடுக்கிறேன்.





இவ்வளவு திட்டங்களைச் செய்து கொடுத்திருக்கிறோம். அதனால்தான் உங்களிடம் உரிமையாக மீண்டும் கேட்க வந்திருக்கிறோம்.

நான் ஒரு சில விஷயங்கள் மட்டும் சொல்கிறேன். இந்தப் பகுதியில் சிறுபான்மை மக்கள், அதுவும் குறிப்பாக, கிறிஸ்தவ மக்கள் அதிகமாக இருக்கக்கூடிய பகுதி. கழகம் எப்பொழுதெல்லாம் ஆட்சிக்கு வருகிறதோ அப்பொழுதெல்லாம் கிறிஸ்தவச் சமூகத்தின் வளர்ச்சிக்காக நிறைய திட்டங்களை நம் தலைவர் செய்திருக்கிறார். அது பேரறிஞர் அண்ணா காலமாக இருக்கட்டும், டாக்டர் கலைஞர் காலமாக இருக்கட்டும், நம் தலைவரின் காலமாக இருக்கட்டும்; கிறிஸ்தவ மக்களுடைய நல்லுறவை, நட்பைப் பேணிப் பாதுகாக்கக்கூடிய ஒரு அரசுதான் நம் திராவிட மாடல் அரசு என்பது அனைவருக்கும் தெரியும்.

தமிழுக்கும் கிறிஸ்தவத்துக்கும் அருந்தொண்டாற்றிய கால்டுவெல் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டிக் கொடுத்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

சென்னையில் இயேசுவின் சீடரான புனித தோமையர் வாழ்ந்த பரங்கிமலைக்கு, `புனித தோமையர் மலை' என்று பெயர் சூட்டியவர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

அன்னை தெரசாவின் நூற்றாண்டு விழாவை, தமிழ்நாடு முழுவதும் மிகச் சிறப்பாக எல்லாரும் அறியுமபடி அருமையாகக் கொண்டாடியது, நம் கலைஞர் தலைமையிலான அரசு.

இப்படி கலைஞர் வழியில் நம் தலைவரும் கிறிஸ்தவ மக்களுக்கு என்னென்ன தேவையோ ஒவ்வொன்றையும் கேட்டு கேட்டுச் செய்துகொண்டு வருகிறார்.

சிறுபான்மையினர் அந்தஸ்துச் சான்றிதழ்

கிறிஸ்தவப் பிரதிநிதிகளை ஒவ்வொரு முறையும் அண்ணன் இனிகோ இருதயராஜ்தான் அழைத்து வருவார். ஒவ்வொரு முறையும் கோட்டையில் நம் முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்தார்கள் என்றால், அந்த கோரிக்கைகளை எல்லாம், அடுத்த நிமிடமே அதையெல்லாம் செய்து தரக்கூடிய முதலமைச்சர்தான் நம் முதலமைச்சர் அவர்கள்.

உதாரணத்துக்கு, இந்தத் திருச்சியில் வரலாற்றுச் சிறப்புமிக்க கிறிஸ்தவக் கல்வி நிறுவனங்கள் பல இருக்கின்றன. அந்தக் கல்வி நிறுவனங்கள் ஐந்து வருடத்துக்கு ஒருமுறை சிறுபான்மையினர் அந்தஸ்துச் சான்றிதழ் (Minority Status Certificate) கட்டாயம் வாங்கவேண்டும் என்று ஒரு விதிமுறை இருந்தது. நம் முதலமைச்சரின் கவனத்துக்கு இந்தப் பிரச்சினையை அண்ணன் இனிகோ இருதயராஜ்தான் கொண்டு வந்தார். உடனே முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு கண்டு, இன்று நிரந்தர சிறுபான்மையினர் அந்தஸ்துச் சான்றிதழ் (Permanent Minority Status Certificate) வழங்கி, அதையும் இணையத்திலேயே பெற்றுக்கொள்ளலாம் என்கின்ற வசதியையும் செய்து கொடுத்தவர் நம் முதலமைச்சர் அவர்கள்.

அதேபோல மதம் மாறிய தலித் கிறிஸ்தவர்களுக்கு இடஒதுக்கீடு வேண்டும் என்று நம் சட்டமன்றத்தில் தனித் தீர்மானத்தை நிறைவேற்றிய முதலமைச்சர் நம் முதலமைச்சர். தலித் கிறிஸ்தவர்களுக்கு இடஒதுக்கீடு கொடுக்கக் கூடாது என்று இன்று உச்சநீதிமன்றத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு வாதாடிக் கொண்டு இருக்கிறது. அந்த பாசிச பா.ஜ.க.வுடன்தான் இன்று அ.தி.மு.க கூட்டணி வைத்திருக்கிறார்கள். எடப்பாடி பழனிசாமி அவர்கள் கூட்டணி வைத்திருக்கிறார்கள் அதை மறந்துவிடாதீர்கள். தேவாலயங்களில் ஊழியம் செய்யக்கூடிய உபதேசியார் மற்றும் பணியாளர்களுக்கு நலவாரியம் அமைத்தவர் நம் முதலமைச்சர்.

பழமைவாய்ந்த தேவாலயங்களைப் புதுப்பிக்கின்ற திட்டத்தில் ஆண்டுக்கு 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார் நம் முதலமைச்சர் அவர்கள். தேவாலயங்களின் கம்பீரம் நம் முதலமைச்சர் நிதி ஒதுக்கீடு செய்ததனால் இன்று காப்பாற்றப்பட்டிருக்கிறது.

### ஜெருசலேம் புனித யாத்திரை நிதி

ஆண்டுக்கு 600 கிறிஸ்தவர்கள் ஜெருசலேம் புனித யாத்திரை செல்ல நிதி உதவி புரிவதற்கு ஆணை பிறப்பித்தவர் நம் முதலமைச்சர். அதேபோல சென்னையில் பேராயர் எஸ்ரா சற்குணம் அவர்களுக்கு அவர்கள் வாழ்ந்த பகுதியில் அந்தச் சாலைக்கு அவரின் பெயரையே சூட்டி, `எஸ்ரா சற்குணம் சாலை' என்று பெயர் சூட்டியவர் நம் முதலமைச்சர் அவர்கள்.

உயிரிழந்த கிறிஸ்தவர்களின் உடலை அடக்கம் செய்ய ஒவ்வொரு மாவட்டத்திலும் ஐந்து ஏக்கர் அளவில் கல்லறை அமைக்க அரசாணை வழங்கப்பட்டிருக்கிறது. அரசு நிலம் இல்லையென்றால், தனியார் இடத்தை வாங்கி கல்லறை அமைக்க 10 கோடி ரூபாய் நம் முதலமைச்சர் ஒதுக்கீடு செய்து கொடுத்திருக்கிறார்.

மதிப்பிற்குரிய போப் ஆண்டவர் ஃபிரான்சிஸ் அவர்கள் மறைந்தபோது, ``நம் தமிழ்நாடு அரசின் சார்பாக ஒரு அமைச்சரையும் அவரோடு உங்களின் வேட்பாளர் அண்ணன் இனிகோ இருதயராஜையும் நேரடியாகச் சென்று இறுதி மரியாதை செய்துவிட்டு வாருங்கள்" என்று அனுப்பி வைத்தவர் நம் முதலமைச்சர் அவர்கள்.

### கிறிஸ்தவ மக்களுக்கான நலத்திட்டங்கள்

நம் திராவிட மாடல் அரசு கிறிஸ்தவ மக்களுக்கான நலத்திட்டங்கள் ஒவ்வொன்றையும் பார்த்துப் பார்த்துச் செய்துகொண்டு இருக்கிறோம். இன்னொரு பக்கத்தில் இன்று நாடு முழுவதும் கிறிஸ்தவ மக்கள் மேல் ஒன்றிய பா.ஜ.க அரசு தாக்குதல் நடத்திக் கொண்டு இருக்கிறார்கள். அதுவும் நாட்டின் வடபகுதியில் கிறிஸ்மஸ் கொண்டாடி வரும் போதே கிறிஸ்தவர்கள் மேல் தாக்குதல் நடத்தியிருக்கிறார்கள்.

மணிப்பூரில் இன்று பல தேவாலயங்களை அடித்து உடைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்ல, இப்போது புதிதாக ஒரு சட்டம் கொண்டு வரப்போகிறார்கள். கிறிஸ்தவத் தொண்டு நிறுவனங்கள், தேவாலயங்கள் குறித்து 'ஃபாரின் கான்ட்ரிபியூஷன் ரெகுலேஷன் அமெண்ட்மெண்ட்' (FCRA) என்று ஒரு மசோதா, ஒரு சட்டத் திருத்தத்தை ஒன்றிய பா.ஜ.க. அரசு கொண்டு வருகிறது.

வெளிநாட்டில் இருந்து கிறிஸ்தவத்தொண்டு நிறுவனங்களுக்கு வருகின்ற நிதியை முறைப்படுத்துகிறோம் என்கின்ற பெயரில், ஒரு மிகப்பெரிய சூழ்ச்சியை பா.ஜ.க. அரசு நடத்தத் திட்டமிட்டு இருக்கிறது. விதிமுறைகளை மீறிவிட்டார்கள் என்று பொய் காரணத்தை சொல்லி கிறிஸ்தவ நிறுவனங்களின் அனைத்து சொத்துகளையும் அபகரிக்கின்ற முயற்சியை இன்று ஒன்றிய பா.ஜ.க அரசு திட்டமிட்டுள்ளது. மிகுந்த எச்சரிக்கையாக வாக்களிக்க வேண்டிய தேர்தல் இது. வக்ஃபு திருத்தச் சட்டம் மாதிரி, இன்று கிறிஸ்தவ நிறுவனங்கள் மேல் நடத்துகின்ற தாக்குதல்தான் இந்த மசோதா. இந்தச் சட்டத் திருத்தத்தை முழுமையாகத் திரும்பப் பெற வேண்டும் என்று இந்தியாவிலேயே சொன்ன முதல் தலைவர், முதல் முதலமைச்சர் நம் முதலமைச்சர் அவர்கள்தான்.

இவ்வளவு சொல்கிறேனே, அண்ணன் இனிகோ இருதயராஜ் அவர்களை வெற்றிபெற வைத்து நீங்கள் சட்டமன்றத்துக்கு அனுப்பினீர்கள் என்றால், இந்தப் பிரச்சினையைப் பற்றியெல்லாம் அவர் தெரிந்து கொண்டு, புரிந்துகொண்டு சென்று பேசுவார். மற்றவர்களுக்கு எல்லாம் இது என்ன பிரச்சினை என்றே தெரியாது, சொன்னாலும் புரியாது. அதனால்தான் நான் உங்களிடம் கேட்பது, உங்கள் மண்ணின் மைந்தர் அண்ணன் இனிகோ இருதயராஜ் அவர்களை வெற்றி பெற வைத்துச் சட்டமன்றத்துக்கு அனுப்புங்கள்.

### உதயசூரியனுக்கு வாக்களியுங்கள்

கடந்த 12 நாட்களாக ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியாகச் சென்று, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதி மக்களைச் சந்தித்து உதயசூரியன் சின்னத்துக்கு வாக்களியுங்கள், நாங்கள் இந்த ஐந்து வருடத்தில் இவ்வளவு செய்திருக்கிறோம், இந்த தொகுதிக்கு இவ்வளவு சாதனைகள் செய்திருக்கிறோம், திட்டங்களைக் கொடுத்திருக்கிறோம், உதயசூரியன் சின்னத்துக்கு மீண்டும் வாக்களியுங்கள் என்று பிரச்சாரத்தில் ஈடுபட்டு இருக்கிறேன். நம் தலைவர் அவர்களும், ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று மக்களைச் சந்தித்துக் கொண்டு இருக்கிறார்.

நம் வேட்பாளர் அண்ணன் இனிகோ இருதயராஜ் அவர்களும் என்று வேட்பாளர் அறிவிக்கப்பட்டாரோ அதற்கு முன்பிருந்தே தொடர்ந்துபணியாற்றி வருகிறார். இவர் தேர்தலுக்குத் தேர்தல் மட்டும் வருகிறவர் கிடையாது. மக்களுடன் மக்களாக எல்லா நாளும், வருடம் முழுவதும் பயணிக்கிறவர்தான் அண்ணன் இனிகோ இருதயராஜ் அவர்கள். இன்று ஒவ்வொரு தெருவாகச் சென்று ஒவ்வொரு வாக்காளரைச் சந்தித்து வாக்கு கேட்டுக் கொண்டு இருக்கிறார்.

### 'திருச்சி கிழக்கில்தான் நிற்பேன்!'

நாம் மற்றவர்களைப் போல இடைவெளி விட்டு இடைவெளி விட்டு பிரச்சாரம் செய்யவில்லை. சில பேர் இன்று ஓய்வு எடுத்து, ஓய்வு எடுத்தே சோர்வாகிவிட்டார்கள். ஆனால், நாம் ஓய்வு இல்லாமல் தொடர்ந்து உழைத்துக் கொண்டு இருக்கிறோம், சோர்வடையாமல் மக்களைச் சந்தித்துக் கொண்டு இருக்கிறோம். உதாரணமாக உலகமே கொரோனா காலத்தில், `லாக்டவுன்' போது முடங்கிக் கிடந்தது. அந்த லாக்டவுன் காலத்தில்கூட நம் தி.மு.க, நம் உடன்பிறப்புகள்தான் களத்தில் இறங்கி மக்களுக்கு என்னென்ன தேவையோ அத்தனையையும் உயிரைப் பணையம் வைத்து நாம் செய்துகொண்டு இருந்தோம். கொரோனா லாக்டவுன் மாதிரி, இன்று பல பேர் வீட்டில் முடங்கிக் கிடக்கிறார்கள். உங்களின் வேட்பாளர் இனிகோ இருதயராஜ் இந்த ஒரு தொகுதியில் மட்டும் அவர் வேட்பாளராக நிற்கிறார்.

### என்ன தெரியுமா சொல்வார்கள்?

இதைச் சொன்னால் என்ன தெரியுமா சொல்வார்கள்? உதயநிதி மட்டும் இரண்டு தொகுதியில் நிற்கிறார், சேப்பாக்கம், திருவல்லிக்கேணி என இரண்டு தொகுதியில் நிற்கிறார் என்று சில அறிவாளிகள் பேசுகிறார்கள். இதுகூட தெரியாத ஒரு தற்குறிக் கூட்டத்திடம் போய் நான் என்னத்தைப் பேசுவது? சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி என்பது ஒரே தொகுதிதான் என்பது கூட தெரியாத ஒரு தற்குறியிடம் சென்று நான் என்னத்தைச் சொல்லி புரிய வைப்பது?

அவர்களையெல்லாம் நாம் தவிர்த்துவிட்டு `நீ கத்துவதைக் கத்து, நான் உழைப்பதை உழைக்கிறேன், என் மக்கள் என் பக்கம் நிற்பார்கள்' என்று சொல்லிவிட்டுப் போய்க்கொண்டே இருக்கவேண்டும். அவர்களையெல்லாம் நீங்கள் புறக்கணிக்க வேண்டும்.

### திருவிழா காலத்து கடைகள்

ஊரில் திருவிழா கூடும், அப்போது அந்த ஊரில் இருக்கக்கூடிய எல்லா மக்களும் சேர்ந்து அந்த திருவிழாவை ஏற்பாடு செய்து நன்றாகக் கொண்டாடுவார்கள். அப்போது அங்கிருக்கக்கூடிய சில வணிகர்கள் காசு பார்க்க வேண்டும் என்று கடைகள் திறப்பார்கள். கூடவே தாஜ்மஹால், ஈபிள் டவர் மாதிரி செட் எல்லாம் போடுவார்கள். அங்கிருக்கக்கூடிய மக்கள் எல்லாம் என்ன செய்வார்கள் என்றால் 'ஏய் நம்ம ஊருக்கு தாஜ்மஹால் வந்துவிட்டது வா சென்று போட்டோ எடுத்துக் கொள்ளலாம்' என்று சொல்லி போட்டோ எடுத்துக் கொள்வார்கள், கூட்டம் எல்லாம் வரும் அதைப் பார்ப்பதற்கு. ஆனால் திருவிழா முடிந்த உடனே அது வெறும் அட்டை என்று அவற்றை கழற்றி எடுத்துக் கொண்டு சென்றுவிடுவார்கள். நான் அட்டை என்று நான்கு மாதத்துக்கு முன்பு சொன்னேன்.

இன்று அது அட்டைதான் என்று களத்தில் நிரூபணமாகிக் கொண்டு இருக்கிறது, அதை மறந்துவிடாதீர்கள். அதெல்லாம் அட்டை, வெறும் காற்று அடித்தால் பறந்து சென்றுவிடும். எனவே நம் வேட்பாளர் அண்ணன் இனிகோ இருதயராஜ் அவர்களை, மிகப்பெரிய வாக்கு வித்தியாசத்தில் நீங்கள் வெற்றி பெற வைத்து, இந்தத் திருச்சி கிழக்கு ஒன்றும் அந்த அளவுக்குச் சாதாரண தொகுதி கிடையாது, இது படித்த அறிவார்ந்த தொகுதி என்பதை நீங்கள் நிரூபித்துக் காட்ட வேண்டும். எப்படித் திருவிழா முடிந்ததும் கடையெல்லாம் காலி செய்துவிட்டுப் போய்விடுவார்களோ, அதே மாதிரி தேர்தல் முடிந்ததும் அந்த கூட்டம் கடையைக் காலி செய்துவிட்டு சென்றுவிடும்.

### டெல்லி அணியா? தமிழ்நாடு அணியா?

இன்று நம் தலைவர் அவர்கள் திரும்பத் திரும்பச் சொல்கிறார். இந்த சட்டமன்றத் தேர்தல் டெல்லி அணியா? தமிழ்நாடு அணியா? டெல்லி அணி Vs தமிழ்நாடு அணி. நான் இன்று இவ்வளவு திட்டங்கள் சொன்னேன், இவ்வளவு வாக்குறுதிகள் சொன்னேனே, நீங்கள் யோசித்துப் பாருங்கள் கடந்த ஐந்து வருடத்தில் ஒன்றிய பா.ஜ.க அரசு இந்த திட்டங்களுக்கு நம் தமிழ்நாட்டுக்கு ஏதாவது செய்திருக்கிறார்களா? நமக்கென்று ஏதாவது திட்டங்கள் கொடுத்திருக்கிறார்களா? நமக்கு வரவேண்டிய நிதிப் பகிர்வு கொடுக்கிறார்களா? கல்வி நிதி மட்டும் கிட்டத்தட்ட 4,000 கோடி கொடுக்க முடியாது என்றுவிட்டார்கள். ஏன்? மும்மொழிக் கொள்கையை ஏற்க வேண்டும் என்கிறார்கள்.

தமிழ்நாட்டில் பேரறிஞர் அண்ணா அவர்கள் கொண்டு வந்தது இருமொழிக் கொள்கை - தமிழ், ஆங்கிலம். இவர்கள் மும்மொழி கொள்கை என்று சேர்த்து இந்தித் திணிப்பை மீண்டும் தமிழ்நாட்டுக்குள் நுழைப்பதற்கான முயற்சி. அதனால்தான் நம் தலைவர், இந்தியாவில் எல்லா முதலமைச்சரும் ஏற்றுக் கொண்டார்கள், நம் தலைவர் மட்டும் சொன்னார் '3,000 கோடி 4,000 கோடி இல்லை, நீ 10,000 கோடி கொடுத்தாலும் தமிழ்நாட்டு மக்கள் மேல் இந்தியைத் திணிக்கமாட்டேன்' என்று சொன்ன ஒரே முதலமைச்சர் நம் முதலமைச்சர்.

இன்று மற்ற முதலமைச்சர்கள் எல்லாம் பார்க்கிறார்கள், தமிழ்நாடு இதனால்தான் இதை ஏற்றுகொள்ளவில்லை என்று சொல்லி, அவர்களும் புதிய கல்விக் கொள்கையை, மும்மொழிக் கொள்கையை எதிர்க்க ஆரம்பித்து இருக்கிறார்கள். இப்படி இந்தியாவில் இருக்கக்கூடிய அனைத்து முதலமைச்சர்களுக்கும் எடுத்துக் காட்டாக இருக்கக்கூடிய முதலமைச்சர் நம் முதலமைச்சர் அவர்கள்.

இன்று டெல்லியின் ஏ-டீமாக அடிமைக்கூட்டம் அ.தி.மு.க வருகிறது. அதுமட்டுமல்ல பி.ஜே.பி-யின் பி-டீம் தான், டெல்லியின் பி-டீம் தான் இந்த தொகுதியைக் குறிவைக்கப் பார்க்கிறார்கள். டெல்லி பி-டீம் உரிமையாளர்கள் தான் இந்த பி-டீம் உரிமையாளர்கள். ஆகவே இந்த ஏ-டீம், பி-டீம், சி-டீம் எத்தனை டீம் வந்தாலும் வெற்றிபெறப் போவது தி.மு.க டீம், நம்ம டீம்தான் என்பதை இந்த தொகுதியில் நீங்கள் நிருபித்துக் காட்டுங்கள்.

எத்தனை நட்சத்திரங்கள் வந்தாலும் கடைசியாக வெற்றிபெறப் போவது உதயசூரியன்தான் என்பதை இந்த தேர்தலில் நிரூபித்துக் காட்டுங்கள்.

நான் இதையெல்லாம் ஏன் உங்களிடம் சொல்கிறேன் என்றால், வருகிற சட்டமன்றத் தேர்தல் நம் தலைவர் சொன்ன மாதிரி டெல்லி அணி Vs தமிழ்நாடு அணி. இதில் டெல்லி அணியைத் தமிழ்நாடு அணி நாம் வெற்றிப்பெற்று காட்ட வேண்டும். அண்ணன் இனிகோ இருதயராஜ் அவர்களை அதிகப்படியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும்.

### மக்களிடம் கொண்டு சேர்த்திடுங்கள்

இன்று தேதி 11. தேர்தல் 23-ஆம் தேதி. நம் கையில் இன்னும் 12 நாட்கள் இருக்கின்றன. உதயநிதி வந்தார், பேசினார், திட்டங்களைச் சொன்னார், வாக்குறுதி கொடுத்தார், எடப்பாடி பழனிசாமி புகைப்படத்தைக் காட்டினார், கிளம்பிச் சென்றுவிட்டார் என்று கலைந்து போய்விடக்கூடாது. நீங்கள் ஒவ்வொருவரும் அடுத்த 13 நாட்கள் இந்தப் பிரச்சாரத்தை மக்களிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

ஒவ்வொரு தெருவாகச் செல்லுங்கள், ஒவ்வொரு வீடாகச் செல்லுங்கள், ஒவ்வொரு வாக்காளரையும் சந்தித்துப் பேசுங்கள். நாம் என்னென்ன திட்டங்கள் கொண்டு வந்தோம் என்று சொல்லுங்கள். மீண்டும் வெற்றி பெற்றோம் என்றால், என்னென்ன பண்ணுவோம் என்று நம் தலைவர் கொடுத்த வாக்குறுதிகளைச் சொல்லுங்கள். முக்கியமாக, மீண்டும் அ.தி.மு.க - பா.ஜ.க அடிமைக் கூட்டத்தை உள்ளே விட்டுவிட்டோம் என்றால் தமிழ்நாட்டை எவ்வளவு பின்னோக்கி இழுத்துக்கொண்டு போய்விடுவார்கள் என்பதை விளக்கிச் சொல்லுங்கள்.

அண்ணன் இனிகோ இருதயராஜ் அவர்களைக் குறைந்தது 50,000 வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்துச் சட்டமன்றத்துக்கு அனுப்ப வேண்டும்.

இந்த திருச்சி கிழக்கு சட்டமன்ற தொகுதியின் வெற்றி, இந்த சட்டமன்றத் தேர்தலின் மிகப்பெரிய முக்கியமான வெற்றியாக மாற்றிக் காட்டுங்கள்.

உங்களின் அன்புக்கும் வரவேற்புக்கும் நன்றி, நன்றி. ஆதரிப்பீர் உதயசூரியன்!

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உரையாற்றினார்.

### பங்கேற்றவர்கள்

திருச்சி மேற்கு சட்டமன்ற வேட்பாளர் அமைச்சர் கே.என்.நேரு, திருச்சி கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் திருவரம்பூர் சட்டமன்ற வேட்பாளர். அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாவட்ட செயலாளர் வைரமணி, அரங்கநாதன், மாநகரச் செயலாளர் மதிவாணன், அவைத்தலைவர் நூர்கான், மாநகரத் துணைச் செயலாளர் சரோஜினி சந்திரமோகன், தொகுதிப் பார்வையாளர் கதிரவன், பகுதிச் செயலாளர்கள் மருந்து கடை மோகன், ஆர்.சி.பாபு, ராஜ் முகமது, மணிவேல், பொதுக்குழு உறுப்பினர்கள் ராஜேஸ்வரன், மணிமேகலை, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் வெங்கடேஷ்குமார், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் முத்து தீபக், துணை அமைப்பாளர் தேசிங்குராஜா, இளைஞர் அணி உள்ளிட்ட அனைத்துச் சார்பு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக் கட்சியைச் சேர்ந்த இந்திய தேசிய காங்கிரஸ், திராவிடர் கழகம், தேசிய முற்போக்கு திராவிட கழகம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், மனிதநேய மக்கள் கட்சி, மனிதநேய ஜனநாயக கட்சி, மக்கள் நீதி மய்யம், தமிழ்தேசம் கட்சி, தமிழ்ப் புலிகள், எஸ்.டி.பி.ஐ, உள்ளிட்ட நிர்வாகிகள் உள்பட பலரும் கலந்துகொண்டனர்.